**சுருக்கம்**

தேனி மாவட்டம் – போடி நாயக்கனூர் வட்டம், போடி நாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம் – குரங்கனி–டாப்ஸ்டேசன் வழி கி.மீ.0/0–13/150 வரையுள்ள சாலையை முதல் கட்ட தள ஆய்வு மேற்கொள்ள நில அளவை செய்து தனியார் தொழில்நுட்ப ஆலோசனை மூலம் விரிவான திட்ட அறிக்கை (DPR) மேற்கொள்ள ரூ.13.29 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது

**நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்.1) துறை**

**அரசாணை (நிலை) எண்:84** **நாள்: 19–06–2020**

**சார்வரி, ஆனி – 5, திருவள்ளுவர் ஆண்டு 2051**

**படிக்கவும்:-**

1) மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.23059/2017/ஆ2, நாள் 08–08–2017.
2) தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அவர்களின் கடித எண். 17061/திட்டம்/2018, நாள் 04.01.2019 (ம) 23.09.2019.

------------

**ஆணை:**

மேலே 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம் மற்றும் தாலுக்காவில் உள்ள போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியான குரங்கனி–டாப்ஸ்டேசன் சாலை (வழி) முதுவாக்குடி கி.மீ.0/0–13/150 வரையுள்ள மலைச்சாலையாகும் என்றும் இச்சாலை மாவட்ட முக்கியச் சாலையான போடி– குரங்கனி சாலை (மா.மு.சா.58) கி.மீ.16/0–ல் தொடங்கி மாவட்ட இதர சாலையான ரோப்வே ஸ்டேசன் சாலை (மா.இ.சா.5955) கி.மீ.0/2–ல் முடிவடைகிறது என்றும் இச்சாலையில் கி.மீ.0/0–1/8, கி.மீ.8/850–12/605 – 13/150 வரை (6.00 கி.மீ) உள்ள சாலைப்பகுதிகள் வண்டிப்பாதையாக உள்ளது எனவும் கி.மீ.1/8–8/850, 12/505–12/605 வரை (7.15 கி.மீ) உள்ள சாலை வனப்பகுதியில் (1.00 மீ அகலம் உள்ள நடைபாதை பயன்பாட்டில் உள்ளது) எனவும் தெரிவித்துள்ளார்.

2) தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அவர்கள் மேலும், போடிநாயக்கனூர் தேனி மாவட்டத்தின் முக்கிய விவசாய நகரம் ஆகும் என்றும் போடிநாயக்கனூரைச் சுற்றிலும் சுமார் 20 கிராமங்கள் உள்ளன, இதில் குரங்கனி கிராமத்தைச் சுற்றிலும் கீழ்முட்டம், முதுவாக்குடி (மேல்முட்டம்), சென்ட்ரல், டாப்ஸ்டேசன் ஆகிய கிராமங்களில் சுமார் 10000ற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர் என்றும் இங்குள்ள மக்களின் முக்கியத் தொழில் விவசாயம் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார். விவசாய விளைபொருட்களை சந்தைகளுக்கு கொண்டுசெல்ல சாலை வசதிகள் இல்லாத காரணத்தால் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும், இச்சாலை மண் சாலையாக உள்ளதால் மழைக்காலங்களில் பிற கிராமங்களுக்கு செல்வது மிகவும் சிரமமாக உள்ளது. இதுபோலவே, குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கும், அவசர காலத்தில் மருத்துவமனைக்குச் செல்வதற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. மேலும், குரங்கனி, டாப்ஸ்டேசன் பகுதிகள் இரு மாநில சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. தமிழக எல்லையில் அமையப்பெற்றுள்ள டாப்ஸ்டேசன் சுற்றுலா தலத்திற்குச் செல்ல கேரள மாநிலத்தின் மூணாறு வழியாக தற்போழுது வாகனப் போக்குவரத்து உள்ளது எனவும் தலைமைப் பொறியாளர் (க(ம)ப) அவர்கள் தெரிவித்துள்ளார்.

3) மேலும், தமிழகத்தின் பிற மாவட்டங்களிலிருந்து, தமிழக எல்லையில் அமைந்துள்ள சுற்றுலாத்தலமான டாப்ஸ்டேசன் செல்வதற்கு தற்போழுது உள்ள வழித்தடமான போடி – மூணாறு – கேரளா பகுதி வழியாக செல்வதற்கு 102.00 கி.மீ. பயணம் மேற்கொள்ள வேண்டும். ஆனால், போடி – குரங்கனி (தமிழக எல்லை) வழியாக இச்சாலை அமையப்பெற்றால் டாப்ஸ்டேசன் செல்வதற்கு 29.00 கி.மீ. மட்டுமே பயணம் மேற்கொள்ள வேண்டும். இதனால் சுமார் 73.00 கி.மீ. தூரம் குறைவதால் எரிபொருள் மற்றும் பயண நேரம் மிச்சப்படுகிறது எனவும் தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும், கி.மீ. 58/4 – 61/4 (3 கி.மீ.) கொடை – கொச்சின் சாலையானது தேனி கோட்டப்பராமரிப்பில் உள்ள மாவட்ட முக்கியச்சாலை ஆகும் எனவும், இச்சாலையினை பராமரிப்பு செய்வதற்கும், 100 கி.மீ. மேல் பயணம் செய்ய வேண்டியுள்ளதாகவும், தமிழகத்தில் உள்ள சாலையை பராமரிப்பு செய்வதற்கும், கேரள மாநிலத்தின் வழியாக செல்ல வேண்டி உள்ளதால், இச்சாலை அமைக்கப்பட்டால் அதிக தூரம் பயணிப்பது தவிர்க்கப்படும் எனவும் தலைமைப் பொறியாளர் (க(ம)ப) அவர்கள் தெரிவித்துள்ளார்.

4) மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி அவர்கள் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், குரங்கனி – டாப்ஸ்டேசன் சாலை (வழி) முதுவாக்குடி கி.மீ. 0/0 – 3/0 வரை மேம்பாடு பணிக்கு அரசாணை எண்.51, நெடுஞ்சாலைத்துறை, நாள். 08.02.1999–ல் ரூ.115.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, கி.மீ.0/0–1/8 வரை மட்டும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்றும், கி.மீ.0/2–ல் உயர்மட்டப்பாலம் கட்டுவதற்கு ரூ.48.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு மூலம் 2002 – 2003 ஆம் நிதியாண்டில் பாலப்பணிகள் முடிக்கப்பட்டு போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிப்பிற்காகக் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள பகுதிகளான கி.மீ.1/8 – 13/150 வரை உள்ள சாலைப்பகுதிகள் மண் சாலையாக ஏராளமான கொண்டை ஊசி வளைவுகளுடன் உள்ளது எனவும், கி.மீ.0/0–1/8 வரையுள்ள சாலையானது நடப்பாண்டில் TNNRIS திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது எனவும் குறிப்பிட்டு, இதனை தொடர்ந்து, கோட்டப் பொறியாளர் (நெ) க(ம)ப தேனி அவர்கள் மூலம் குரங்கனி முதல் டாப்ஸ்டேசன் வரை உள்ள வனத்துறைக்கு சொந்தமான பகுதியில் முதல் கட்ட தள ஆய்வு மற்றும் நில அளவைப்பணி மேற்கொள்ள வனத்துறையினரிடம் அனுமதி கேட்கப்பட்டது என்றும், மாவட்ட வன அலுவலர், தேனி அவர்களின் கடிதம் மூலம் இச்சாலை அமைந்துள்ள வனப்பகுதியில் முதல்கட்ட ஆய்வுப்பணிகள் மற்றும் நில அளவைப்பணிகள் மேற்கொள்ள நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். இதன்படி சாலைப் பகுதிகளிலும் வனத்துறைக்குச் சொந்தமான பகுதிகளிலும் தனியார் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனம் மூலம் ஆய்வு செய்து சாலை அமைப்பதற்குண்டான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய வேண்டி உள்ளது எனவும், எனவே, தனியார் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனம் மூலம் குரங்கனி – டாப்ஸ்டேசன் சாலை கி.மீ. 0/0 –13/150 வரை சாலையை முதல்கட்ட கள ஆய்வு மேற்கொண்டு நில அளவை செய்து விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) ரூ.15.60 இலட்சம் மதிப்பில் தயார் செய்வதற்கு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) அவர்கள் அரசின் நிர்வாக ஒப்புதலையும் கோரியுள்ளார்.

5) தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து அதனை ஏற்று தேனி மாவட்டம், போடி நாயக்கனூர் வட்டம், போடி நாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், குரங்கனி–டாப்ஸ்டேசன் வழி கி.மீ.0/0–13/150 வரையுள்ள சாலையை முதல் கட்ட தள ஆய்வு மேற்கொள்ள நில அளவை செய்து தனியார் தொழில்நுட்ப ஆலோசனை மூலம் விரிவான திட்ட அறிக்கை (DPR) மேற்கொள்ள ரூ.13.29 இலட்சத்திற்கு (ரூபாய் பதின் மூன்று இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரம் மட்டும்) வரையறை செய்து நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6) மேலே பத்தி 5–ல் ஒப்புதலளிக்கப்பட்ட தொகை வரவு செலவுத் திட்டம் 2020–2021–ல் அனுமதிக்கப்பட்ட தொகையிலிருந்து கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"5054 - சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 80 –பொது – 004–ஆராய்ச்சியும் மேம்பாடும் – மாநிலச் செலவினங்கள் – AA – சாலைகள் மற்றும் பாலங்கள் என்பதன் கீழ் திட்டப் பணிக்கான ஆய்வு/மதிப்பீடு – 416 – பெரும் பணிகள் – 01 – பெரும் பணிகள்".
(IFHRMS DPC : 5054-80-004-AA-41601)
(Old DPC : 5054-80-004-AA-1609)

7) மேலே பத்தி 5–ல் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிடதலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத் துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8) இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.எண்.15302/PW1/ 2020, நாள் 13.05.2020–ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம்.
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு),நெடுஞ்சாலைத் துறை, சென்னை–25.
கோட்டப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத் துறை, தேனி மாவட்டம்.
கரூவூல அலுவலர், தேனி மாவட்டம்.

<u>நகல்:</u>
நிதித் (பொப.1) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
துணை செயலாளர் அவர்களின் நேர்முகஉதவியாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9.
கோ.எண்.10367/எச்.எஸ்.1/2017
இருப்பு கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

க.பழனிசாமி
பிரிவு அலுவலர்